[2011 ஆகஸ்ட் 19

46—

மிதவைப் பேருந்து

***1091—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்கு மிதவைப் பேருந்து இரவில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒகேனக்கல்—சென்னை (வழி) தருமபுரி வழித்தடத்தின் நீளம் 345 கி.மீ. ஆகும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலத்தின் சார்பாக சாதாரண புறநகர்ப் பேருந்து ஒன்றும், சொகுசுப் பேருந்து ஒன்றும் சேர்த்து நாளொன்றுக்கு 4 நடைகளை இயக்கி வருகிறது. இதில் சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்குச் செல்லும் பேருந்தில் தருமபுரிவரை மட்டுமே பயணிகளின் அடர்வு உள்ளது. கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சீரழிந்த போக்குவரத்துத் துறையை மேம்படுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பொதுமக்கள் நலன் கருதி, 3,000 புதிய பேருந்துகள் வாங்க ஆணையிட்டுள்ளார்கள். எனவே, ஒகேனக்கல்—சென்னை (வழி) தருமபுரி வழித்தடத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று புதிய பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே சிறந்த சுற்றுலாத்தலமாக ஒகேனக்கல் விளங்குகிறது. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியைக் காணவும், நீர்வீழ்ச்சியிலே குளிக்கவும், பரிசலிலே செல்லவும், குறிப்பாக சுவையான, சூடான மீன்களைச் சாப்பிடவும், சென்னை உட்பட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஒகேனக்கல்லுக்கு வருகிறார்கள். ஆனால், சென்னைக்கு ஒரே ஒரு பேருந்து மட்டும்தான் இயக்கப்படுகிறது. அதுவும் பகல்*

2011 ஆகஸ்ட் 19]

நேரத்தில்தான் இயக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூடுதலாகப் பேருந்து இயக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இரவு நேரத்திலே ஒரு மிதவைப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்னுடைய தளி தொகுதியிலிருந்து பொது மக்கள், அரசு அலுவல் காரணமாகவும், வியாபார ரீதியாகவும் சென்னைக்கு வரவேண்டுமென்றால் நேரடியாகப் பேருந்து இல்லை. ஆகவே, தளியிலிருந்தும் சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்—சென்னை புதிய பேருந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் இயக்கப்படும். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, தளியிலிருந்து சென்னைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அந்த 3,000 பேருந்துகளில் இந்த இரண்டு பேருந்துகளும் அவசியம் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப்பெற்று, சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்கு மிதவைப் பேருந்து விடப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அந்தப் பேருந்து சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்கு இயக்கப்படும்போது, அந்தப் பேருந்து காஞ்சிபுரம் நகரின் உள்ளே வந்து போவதற்கு வழிவகை செய்யப்படுமா? அதுபோல, சென்னையிலிருந்து கோவை, சேலம், பெங்களூரு போன்ற இடங்களுக்குச் செல்லும் மிதவைப் பேருந்துகளையும் காஞ்சிபுரம் நகரின் உள்ளே வந்து போவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

[2011 ஆகஸ்ட் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா பேருந்துகளும் காஞ்சிபுரம் உள்ளே வந்து சென்றால் நாங்களெல்லாம் என்ன செய்வது? (சிரிப்பு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திற்குத் தேவையான பேருந்துகள் சென்னையிலிருந்து தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களினுடைய ஆட்சியில் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காஞ்சிபுரத்திற்குக் கூடுதலாகப் பேருந்து வசதிகள் வேண்டுமென்றால், தனியாக சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு, துணைக் கேள்விகளைப் பொறுத்தவரை, இதுவரையில் கேள்வி கேட்காத உறுப்பினர்கள் யாரும் இருந்தால் முதலில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு வாய்ப்பு தரப்படும். திரு. பி.எல். சுந்தரத்திற்கு இதுதான் முதல் துணைக் கேள்வி. அவருக்கு வாய்ப்பு தரப்படுகிறது. மற்ற உறுப்பினர்கள் கையை உயர்த்தும்போது துணைக் கேள்விகள் எதுவும் இதுவரை அவ்வுறுப்பினர்களால் கேட்கப்படவில்லையென்றால் அவர்களுக்கு வாய்ப்புத் தரப்படும். அதனால் நீங்கள் பேசுங்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலத்திலிருந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அடிக்கடி கேட்கக்கூடாது.

திரு. பி.எல். சுந்தரம்: சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்கப்பட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் நமது ஆட்சிக் காலத்தில் அது இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2006 ஆம் ஆண்டு இயக்கப்பட்ட பேருந்துகளெல்லாம் 2007 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டன. 2007 ஆம் ஆண்டில் இயக்கப்பட்ட பேருந்துகள் 2008 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டன. இப்படி பல்வேறு பேருந்துகள் மக்களுடைய தேவைகளைக் கருத்தில்கொள்ளாமல், கடந்தகால தி.மு.க. ஆட்சியில் நிறுத்திவிட்டனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.*

திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேட்டிலிருந்து திருப்பதிக்கு, பூந்தமல்லி–திருவள்ளூர் வழியாக திருப்பதிக்குச் செல்வதற்கும், கோயம்பேட்டிலிருந்து ஆவடி வழியாக திருப்பதி செல்வதற்கும் பேருந்து விடப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோயம்பேட்டிலிருந்து திருப்பதிக்குப் பேருந்துகள் சென்று வருகின்றன. பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்கும்பட்சத்தில் தேவையான பேருந்துகளை இயக்குவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் வருசநாடு முதல் சென்னை வரை ஒரு சொகுசுப் பேருந்து விட்டார்கள். அதற்குப் பின்பு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, அந்தப் பேருந்தை வேண்டுமென்றே நிறுத்திவிட்டார்கள். ஆண்டிப்பட்டி பகுதியிலுள்ள*

வருசநாடு பகுதி உள்காடு, மலைக் கிராமங்கள் நிறைந்த பகுதி என்பது தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பகுதிக்கு வந்து சென்ற பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் சொகுசுப் பேருந்தை வருசநாடு முதல் சென்னை வரை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பொதுமக்களின் நலன் கருதி இயக்கப்பட்ட வருசநாட்டிலிருந்து சென்னைக்கு வந்த அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டது உண்மை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்மீது மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, ஆய்வு செய்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன் அவர்கள். ஏற்கெனவே நீங்கள் மூலக் கேள்வி ஒன்று கேட்டிருக்கிறீர்கள். துணைக் கேள்வி ஒன்று கேட்டிருக்கிறீர்கள். இது உங்களுக்கு ஒரு additional கேள்வி.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி என்பது இரண்டாவது முறை மட்டும்தான். இன்றோடு சேர்த்தால் இரண்டாவது.

புதுக்கோட்டையிலிருந்து பெங்களூருக்குப் பேருந்து இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலிருந்து பெங்களூருக்குப் புதிய பேருந்து வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டையிலிருந்து பெங்களூருக்குச் செல்கின்ற பயணிகளுடைய அடர்வு குறித்து ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

2011 ஆகஸ்ட் 19]

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

கால்நடை மருத்துவமனை

4418—திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, வடபட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிறப்புமிகு இந்த மாமன்றத்தில், எனக்கு நிகரில்லா பெரும் வாய்ப்பைத் தந்திட்ட ஒப்பில்லா தாய் உருவத் தெய்வமே, என் நன்றி மலர்களைத் தங்கள் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பித்து, என் பணி செய்திட விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, (அ) வடபட்டி கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.*

திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னித் தமிழ்நாட்டின் காவல் தெய்வம், கழகத் தொண்டர்களின் கற்பக விருட்சம், ஏற்றமிகு தமிழகத்தின் எழுச்சி*